உ

வேலுமயிலுந்துணை.

இஃது

# பெருவயலில் யெழுந்தருளியிராநின்ற இரணபெலிமுருகன்பேரில்

ஆனைமானகர்

## சாமிநாதபிள்ளை பாடிய காதல்.

இஃது

இராமநாதபுரம்ஜமீந்தாரியில், பிரதானியாயிருந்தவரும் ஷை பெருவயல்க் கோவில்கட்டி பிரதிஷ்டைசெய்து வைத்தவருமான வயிரவன் சேருவைகாரர் பௌத்தரன் வயிரவலிங்கஞ்சேருவைகாரர் குமாரன் மங்களசுந்தரஞ்சேருவை கேட்டுக்கொண்டபடி.

இராமநாதபுரம் றைட்டர்

முத்துக்கருப்பபிள்ளையவர்கள்

லெட்சுமிவிலாசஅச்சுக்கூட்த்திற்பதிப்பிக்கலாயிற்று.

சர்வதாரி ஞு

ஆனி மீ

கடவுள் துணை

# பெருவயல் இரணபெலிமுருகன் பேரிற் காதல்

திருமேவுமிந்தச் செகம்விளங்கவந்ததெய்வம்
பெருவயலூர்மேவுரண பெலிமுருகன்காதல்சொல்ல ... ... ... ... (௧)
குஞ்சரமுகவன் ஜெயங்கொண்டவிநாயகன்றன்
கஞ்சமலர்ப்பாதங் கருத்தில்மறவேனே ... ... ... ... ... ... (௨)
மணமணியும்பொற்கடம்ப மாலையணிதிண்புயத்தான்
ரணபெலிமுருகர்தன்மேல் நற்றமிழின்காதல்சொல்ல ... ... ... ... (௩)
புள்ளிமயில்வாகனன்றன் பொற்பாதங்காப்பாமே
வள்ளிதெய்வானையிரு மலர்ப்பாதம்போற்றிசெய்து ... ... ... ... ... (௪)
செங்கோசனத்திருக்குந் திசைமுகன்றன்பங்கிலுறை
வெங்கோசனமேவு மின்னரசே முன்னடவாய் ... ... ... ... ... (௫)
அய்யன்றுணையாக முப்பிடாரியருள்புரிய
உய்யமுரிஜயனுட னூர்காவலன்றுணையே ... ... ... ... ... ... (௬)
மூவுலகிற்போற்று முருகேசன்காதலைநான்
பாவலர்கண்முன்பாகப் பாடத்துணிந்தெனவும் ... ... ... ... ... ... (௭)
அற்புதஞ்சேர்தோகைமயி லாடவும்வான்கோழியதற்
கொப்பென்றாடுவதற் கொப்பென்றுரைத்திடுவாம் ... ... ... ... (௮)
பெற்றசிறுகுதலை பிள்ளைமொழியாகுமென
நற்றமிழின்வல்லோர் நன்னூலுமனமகிழ்வீர் ... ... ... ... ... (௯)
யான்சொல்லுமித்தமிழி லியாதுபிழையுற்றாலும்
மான்மகடன்னேசன் மலைமுருகரேமகிழ்வார் ... ... ... ... ... (௰)
ஆறுதலையீசனரு ளாறுதலையானாலும்
போதின்மலையான் பொதிகமெனுமாமலைநாடான் ... ... ... ... (௰௧)
நேராதனைமதியான் நேரார்தனைமதியான்
சூரர்தனைமதியான் தூலங்குலைவகைமாநதியான் ... ... ... ... ... (௰௨)
மாமலையின்வேடவப்பெண் வள்ளிமணஞ்செய்தாடன்
காமலிப்பொன்னாடான் மிக்கானசெம்பினன்னாடாள் ... ... ... ... (௰௩)
விண்ணோர்பதிநிகராய் விளங்குந்திருநகராம்
மண்ணிலுயர்பேராம் பெருவயலென்னும்மாநகரான் ... ... ... ... (௰௪)
சக்கிரகிரிசத்தியொரு வட்டமதிலட்டகிரி
மிக்கபுகழிட்டுவரும் மேதைபுரிமாதரங்கள் ... ... ... ... ... (௰௫)
விடவரவுபடகெளிய விரிகடலுமொன்றுபட
வடவனையேகிடுகிடென வயங்குமதயானையினன் ... ... ... ... ... (௰௬)

வெண்டாளமாலையினன் வெரிமலர்மாலையினன்
புண்டரிகமாது பொருங்கடம்பமாலையினன் ... ... ... ... ... (௧௭)
கடலொலியுமெனக் ககனமதின்முழக்கி
ளட்டுமிடி திமிதிடென வதிருமொலிமணிமுரசான் ... ... ... ... (௧௮)
மேவலர்குட்சூலனையே வென்றரணவீரன்
தேவருக்குந்தேவன் சேவற்கொடிவீரன் ... ... ... ... ... ... (௧௯)
பஞ்சாக்ஷரக்கோடி பாரிலுற்றபல்லுயிரு
மஞ்சவவர்களையே வடக்குகின்றவாணையினன் ... ... ... ... ... (௨௰)
சங்கமணிமுரசு தாளம் மேளம்பூரி
மங்களவாத்தியநிதமு மாருதசன்னிதியான் ... ... ... ... ... (௨௧)
ரம்பையுருவசி மின்னார்கணடனமிட
வம்பொருசப்பெண்கணிதமு மாடல்புரிசன்னிதியான் ... ... ... (௨௨)
அன்னங்கள்கூவி ஆடுங்கிளிபாடும்
வன்னமயில்நடன மாடல்புரிசன்னிதியான் ... ... ... ... ... (௨௩)
மாதவர்கள்பத்தர்சித்தர் மாமுனிவர்போற்றுகட
லோலமெனவேத மொலிமுழங்குஞ் சன்னிதியான் ... ... ... (௨௪)
காமினியோர்கைதொழுது காணிக்கைக்காவடிகள்
செயசெயவெனவே செலுத்துந்திருச் சன்னிதியான் ... ... ... (௨௫)
ஓதுசடாட்சரத்தி னுள்ளாயமர்ந்ததெய்வம்
வேதங்கள்நாலும் விளங்குங்குமரேசன் ... ... ... ... ... ... (௨௬)
அவ்வகையாம்பூமிக் கதிககுறிஞ்சிநிலம்
தெய்வமாமிந்தச் செகம்விளங்கவந்ததெய்வம் ... ... ... ... (௨௭)
பன்னிரண்டாம்நாளில் பவமீதிலேவேலன்
மின்னவவதரித்த விளங்குங்குமரேசன் ... ... ... ... ... ... (௨௮)
ஒருமுனிவனுந்தனக் கோப்பிலாமாமுனிவன்
குறுமுனிவன்றனக்குக் குருவாகவந்ததெய்வம் ... ... ... ... (௨௯)
வெள்ளிசுக்கிரவாரம் விரதமுற்றோர்தங்கட்கு
விள்ளரியவாழ்வுதரும் மெய்ஞானதேசிகனும் ... ... ... ... ... (௩௰)
வந்துபணிந்தோர்கள் வல்பிணியெலாமகற்றி
நந்தாதவாழ்வுதரும் நாராயணன்மருகன் ... ... ... ... ... ... (௩௧)
திங்கள்விரதந் திருக்கார்த்திகைவிரதந்
தங்காமற்செய்தவர்க்குச் சாசுவதமுற்றதெய்வம் ... ... ... ... ... (௩௨)
எள்ளுக்குள்ளெண்ணெய்யைப்போ லெங்குநிறைந்ததெய்வம்
வள்ளிதெய்வானைக்கு மணவாளனானதெய்வம் ... ... ... ... ... (௩௩)
பூசமகமுத்திரமும் பொருந்துந்திருநாளான்
நேசத்தின்மிக்கான சிறையைமணங்கொண்டதெய்வம் ... ... ... (௩௪)

ஆடிவருகின்றநல்ல அன்னமுதுக்காவடிகள்
பாடிவிளையாடிவரும் பாற்காவடிசோடி ... ... ... ... ... (௩௫)
மேவடியாம்வீபூதி மிக்கதேன்சக்கரையுங்
காவடிகள்கோடிதனைக் காணிக்கைகொண்டதெய்வம் ... ... ... (௩௬)
நந்தூர்வயல்மேவு மிலக்குமிப்பெண்ணாள்சூழுஞ்
செந்தூர்ப்பதியினிதஞ் செந்தூரானனதெய்வம ... ... ... ... ... (௩௭)
சேரார்பகையமரத் தேவர்குடியேறப்
பாரோர்வளர்ந்தேறப் பழனிமலைவந்ததெய்வம் ... ... ... ... (௩௮)
சந்ததமும்போற்றுந் தானவர்கள்கொண்டாடுஞ்
செந்திருவுகந்த திருவாவினன்குடியான் ... ... ... ... ... ... ...(௩௯)
அரன்கிரியன்மிக்கதென் னண்டரெல்லாங்கொண்டாடும்
பரன்கிரியில்மேவுகின்ற பன்னிருகைவேல்முருகன் ... ... ... ... ...(௪௰)
அடிமைகளைக்காக்கவரு மன்னுளின்மேலான
கொடுமளூர்மேவுங் குமரகுருபரனும் ... ... ... ... ... ... (௪௧)
வடிவேடுவர்குலப்பெண் வள்ளிமணவாளன்
திருவேடகத்தில்வருந் தேவர்திருமகனும் ... ... ... ... ... ... (௪௨)
செந்நற்கிரிமேவுந் தேசமெலாங்கொண்டாடுங்
குன்னக்குடியிற் குமரேசரானதெய்வம் ... ... ... ... ... ... (௪௩)
ஞாலமெலாங்கொண்டாடும் நல்லமுகவைதனில்
வாலசுப்பிரமணியமென வந்துதித்தகந்தனுமாம் ... ... ... ... (௪௪)
ம[illegible]ரும்பூங்கா வனஞ்சூழ்திருநகரா
செட்டிக்குடியில்வள ரெங்கோன்முருகேசன் ... ... ... ... ... (௪௫)
தொல்வினையெலாமகற்றிச் சோழநாடானதிலே
புல்வயலில்நாளும் பொருந்துங்குமரேசன் ... ... ... ... ... ... (௪௬)
பூமிமலைக்கதிகப் பொன்மலைக்குஒப்பாகுஞ்
சாமிமலையிற்குமர சாமியெனவந்ததெய்வம் ... ... ... ... ... ... (௪௭]
வருத்தமிலாமலிந்த வையகமெலாம்வாழ்கத்
திருத்தணியில்வேலரெனச் சித்துவிளையாடுதெய்வம் ... ... ... ... (௪௮)
தொழுதபழவடியார் தொல்வினையெலா மகற்றிக்
கழுகுமலையினிலே கந்தரெனவந்ததெய்வம் ... ... ... ... ... ... (௪௯)
எத்திசையும்போற்ற விமையவருங்கொண்டாட்
வர்த்தனைசேர்கின்ற வராலிமலைக்கந்தனுமாம் ... ... ... ... ... ... (௫௰)
நீலமலைபோன்ற நெடியோன்வடிவழகர்
சோலைமலைக்கந்த சுவாமியெனவந்ததெய்வம் ... ... ... ... ... ...(௫௧]
மைக்கண்விழிமடவார் வள்ளிமணவாளன்
சிக்கந்தாமலைவாழ் சிங்காரவேல்முருகன் ... ... ... ... ... ... ...(௫௨)

கண்கண்டதெய்வங் கலிகாலமெய்யனுமா
மெங்கள்குமரேச னெனவந்ததெய்வபிரான் ... ... ... ... ... (௫௩)
தவமுநிவோர்கொண்டாடத் தாரணியோர்தெண்டனிடச்
சிவகிரியில்வேலனெனச் சித்துவிளையாடுதெய்வம் ... ... ... ... ... (௫௪)
சயிலையெனும்வேலூர்க் கடவுள்குமரேசன்
மயில்தனிலேசுப்பிர மணியனெனவந்ததெய்வம்... ... ... ... ... (௫௫)
காணிக்கைகொண்டு கடலேறிப்போற்றவரும்
மாணிக்கக்கெங்கை வளஞ்சேர்கதிர்காமம் ... ... ... ... ... ... (௫௬)
ஒப்பில்லாத்தெய்வம் உத்திரத்திலேயுதெம்பு
சுப்பிரமணியந்தன்னில்நிதம் சுப்பிரமணியரானதெய்வம் ... ... ... (௫௭)
தெள்ளிதமாய்முன்னாட் டினைப்புனத்தின்மேவுகின்ற
வள்ளிதனைமாலையிட்ட வள்ளியூர்க்கந்தனுமாம் ... ... ... ... ... (௫௮)
செவ்வென்றபூமிதனிற் றிருச்செங்காடானதிலே
வேலனெனாளும் விளையாடுங்கருத்தவ்வியம் ... ... ... ... ... (௫௯)
கந்தமுருநல்ல சயிலைமலையினிலே
கந்தனெனாளும் காசினியோர்போற்றுதெய்வம் ... ... ... ... ... [௬௰]
சென்னிமலைச்சுப்பிரமணிய தெய்வமெனவந்ததெய்வம்
அன்னாட்சிவமலையில் ஆறுமுகத்தெய்வமுமாம் ... ... ... ... ... [௬௧]
செந்நெல்வளஞ்சேருஞ் செங்கரும்புமுத்தீனும்
மன்னியபூங்காவில் மயிலினங்கள்கூத்தாடும் ... ... ... ... ... [௬௨]
அஞ்சுகங்கள்பாடும் அன்னம்விளையாடும்
மஞ்சுதவன்சோலை வளஞ்சேருமாநாரம் ... ... ... ... ... ... [௬௩]
நலஞ்சேர்பெருவயலூர் நன்னகரந்தன்னில் ரண
பெவிமுருகனென்றுநிதம் பேர்விளங்கவந்ததெய்வம் ... ... ... ... [௬௪]
அரிவையர்கள்வள்ளி தெய்வானைமனோகரனும்
பெருவயலூர்மேவுரண பெவிமுருகரானதெய்வம் ... ... ... ... [௬௫]
மகா ராஜ ராஜ ஸ்ரீ மலர்மாதெனவுதித்த
ஜெகராசர்மெச்சவருஞ் செல்லத்திருமாது ... ... ... ... ... [௬௬]
சேதுஸமஸ்தானஞ் செங்கோன்மையேபுரியும்
மாதுபருவதாவர்த்தினித்தா யுற்றதெய்வம் ... ... ... ... ... ... [௬௭]
புணயறிவுநெறிதருமம் போதமிகுசாதுகுணம்
இரவிகுலசேகரனும் இராசாதிராசனுமாம் ... ... ... ... ... ... [௬௮
மேதைபெறுமுத்து விஜயரெகுநாதசேதுபதி
இராசேந்திரன் சிந்தைகுடிகொண்டதெய்வம் ... ... ... ... ... [௬௯]
தாஷ்டிகன்சேது சமஸ்தானமானேஜர்
கோட்டைச்சாமிமனதிற் குடியிருக்கும்வேல்முருகன் ... ... ... ... [௭௰]

சத்தியவர்ன்மாப்பிளைச் சாமிமகராஜன்
சித்திரநாராயணவேள் சீ பெருசவைத்ததெய்வம் … … … … (௭௧)
தென்புதுவையூரான் சிவஞானதீரனுட
தன்பங்கிலிருந்தருட்செய் சண்முகவேலாயுதமாம் … … … … (௭௨)
சேதுபதிராசேந்திரன் செங்கோன்மைபொங் கருட்செய்
காதன்பெருவயலில் ரணபெலியின்மாமுருகன் … … … … (௭௩)
தேசமெலாம்போற்றுகின்ற சேதுராசேந்திரதனை
வாசற்பிரதானி மதியூகியென்பவராம் … … … … … … (௭௪)
வாலைமகன்முத்து வயிரோர்திரனன்னுளி
லாயமுங்கோபுரமு மன்பாகச்செய்தருளி … … … … … (௭௫)
நன்னயமதாக ரதரோகணமுண்டுபண்ணி
இன்றைநமென்னு மிருசகும்வடிவேல்முருகன் … … … … (௭௬)
ஈசனருட்பெற்ற மங்களேஸ்பரகுருகுலத்தோர்
பூசைபுரிந்த புராதனவராகவரும் … … … … … … (௭௭)
பேராண்ஜபம் பெருமாள்குருகுலத்தோர்
சீரானமாமறையோர் சீர்பெருகவைத்ததெய்வம் … … … … (௭௮)
மந்திரியாமுத்து வயிரோந்திரன்வம்மிசத்தில்
நந்தாதசெல்வன்முத்து ராமலிங்கபூவனுடன் … … … … … (௭௯)
மானபரண மாவாணற்கனுகூலன்
மீ[illegible]சுந்தரவேள் மீநனீகன்சண்முகவேள் … … … … (௮௰)
மங்காமற்செல்வம் வர்த்திக்கவென்றும்
வங்கிசத்தைவிரட்சிக்க வந்தவடிவேல்முருகன் … … … … … (௮௧)
சம்மந்தராகிச் சமணர்கழுவேற்றிவைத்த
பெம்மான்முருகன் பிறவானிரல:தான் … … … … … (௮௨)
அருணகிரிநாதனுக் கன்றுளிற்பாடவரங்
கருணைபுரிகின்ற கருணாகரக்கடவுள் … … … … … … (௮௩)
அக்காலந்தன்னி லரனுடனேவாதாடும்
நக்கீரனுக்கிரங்கி யிரட்சித்தகருத்தவ்வியம் … … … … … (௮௮)
ஆறுகோணாறுவீ டாகத்திலாறுதெய்வம்
ஆர்க்கத்தம்போர்க்கத்தி லாறுதிருவாறுமுகம் … … … … (௮௯)
ஆதிசிவனுமையா ளரனருளும்பாலகனும்
சிதரனுமெங்கள் திருமால்திருமகனும் … … … … … … (௯௰)
நாற்றிசையிலுள்ளோரை யிரட்சிக்கவந்ததெய்வங்
கார்த்திகையாள்சேயன் கலிகாலமெய்யனுமாம் … … … … (௯௧)
சூரசங்காரன் சேவற்கைமயில்வாகனத்தான்
பாரெங்குமேவும் பரஞ்சோதியானதெய்வம் … … … … … (௯௨)

காலாயுதக்கொடியோன் கையாறுமாறுமுள்ளான்
வேலாயுதக்கடவுள் வேல்முகவன்றுணைவன் ... ... ... ... ... (௬௩)
தெண்டாயுதபாணி தெய்வபிரானென்றுலகு
கொண்டாடுந்தெய்வக் குஞ்சரிமணாயசனும் ... ... ... ... ... (௬௪)
அரவனத்தனை வவர்சகுந்திருமருசன்
சரவணத்திலன்றுதித்த சரவணபவக்கடம்பன் ... ... ... ... (௬௫)
அல்லிமலர்தூவி யமரரெலாம்போற்றிநிற்க
வெள்ளிவாரகனொலுவில் வீற்றிருக்கும்போதினிலே ... ... ... (௬௬)
வேட்டையின்மேற்சென்றுவர வேணுமென்றேமுருகன்
நாட்டமுடன்வீரர்பல விராணுவர்க்குஞ்சொல்லுமென்று ... ... ... (௬௭)
இடும்பனுக்குமுரு கேசன்புரிந்தவுடன்
ஆடும்பூதசேனை மற்றெல்லவர்க்குஞ்சொல்லினராம் ... ... ... (௬௮)
கோவிற்காலஞ்சென்று குமரேசனற்சருகைப்
பூவிட்டவங்கிசார்ப் பூண்டுமேயர்பாகுகட்டி ... ... ... ... ... (௬௯)
தங்கக்கடுக்கன் சரப்பளியுமேல்முருகு
முன்கையமுதாரி முத்தாரமுமணிந்து ... ... ... ... ... ... ... (௭௰)
கூரம்புவேலெடுத்துக் கூர்தசமுதாடுகட்டி
கேரிசமும்வாளுடனே யிரத்தினமணிததெண்டெடுத்து ... ... ... (௭௧)
மாபுரத்தில்மூத்த வயிரேந்திரன்செய்திருக்கும்
கோபுரவாசல்விட்டுக் குமரேசனங்குவரப் ... ... ... ... ... ... (௭௨)
பாவாடைகுஞ்சம் பக்கத்திலேவீச
பாவாணர்கந்தருவர் பல்லாண்டிசைபாட ... ... ... ... ... (௭௩)
பச்சைக்குடைநிழற்றப் பலபடையின்வீரர்களுஞ்
செயசெயவெனவுந் திசைகளெங்குஞ்சூழ்ந்துவர ... ... ... ... (௭௪)
வாரிமுழக்கமென வாத்தியங்களுமுழங்க
வீரவாகுமுதலாய் வீரரெல்லாமுன்னேக ... ... ... ... ... (௭௫)
மட்டடங்காவீரன் வல்லிடும்பமூர்த்தியுந்தான்
கட்டியங்கள்கூறிவரக் கானவர்களெல்லோரும் ... ... ... ... (௭௬)
பன்றிமுயல்மான்கள் பாச்சுவலைப்பறவை
கண்ணியொட்டிக்கொண்டேவெகு கானவர்கள்முன்னேக ... ... (௭௭)
கொடிப்புலியதனை கொக்கரித்துப்பாய்கின்ற
வீரமிடுஞாளிகளை வீரர்பலர்கொண்டேக ... ... ... ... ... (௭௮)
விரஞ்சிதவொய்யார விரணபெலியின்மாமுருகன்
பஞ்சகெதிகொண்டே பரிமீதிலேகினராம் ... ... ... ... ... (௭௯)
காளையார்மேவுங் கானகத்திலேமுருகன்
பாளையமாய்ச்சென்று பரியைவிட்டுத்தானிறங்கி ... ... ... ... ... (௮௰)

பன்றிமுயல்மான்கள் பலமிருகமானதுக
ளொன்றும்படிநாலு புறத்தில்வலைகட்டவிட்டு ... ... ... ... (௱௰௧)
வேலாயுதமெடுத்து வேலவனும்வீரர்களும்
வேலால்மிருக வேட்டையதுசெய்தனராம் ... ... ... ... ... (௱௰௨)
காடுகலைத்துக் கடியமிருகமெலா
மோடுவதைக்கண் டொருமிக்கவேமறித்து ... ... ... ... ... (௱௰௩)
வீரிட்டவெம்புலியை வேலால்முருகேசன்
கூரிட்டுக்குற்றிக் கொன்றுவிழச்செய்தனராம் ... ... ... ... (௱௰௪)
கலைமான்களோடுவதைக் கண்டகண்டவீரருடன்
கொலைபுரிந்துதானிடும்பன் கொன்றுவிழச்செய்தனரோ ... ... ... (௱௰௫)
வேட்டைவெடிக்காரர் வெகுண்டோடுமான்கலையை
வோட்டத்திற்சுட் டுயிர்வதைகள்செய்வாரும் ... ... ... ... ... (௱௰௬)
கோறப்புலிகரடி கொக்கரித்துவாரதனை
வீரவாகுதேவர் விரைந்தங்கேகொன்றனராம் ... ... ... ... (௱௰௭)
மட்டடங்காமிருகம் வாரின்வழியோடக்
கட்டுவலையிற்பாய்ந்து கண்ணியினிற்பட்டுழன்று ... ... ... ... (௱௰௮)
முட்டாகவந்த முயல்மான்கலைகடனைப்
பட்டுவிழும்படிதுப் பாக்கிகொண்டுசுட்டிடுவார் ... ... ... ... (௱௰௯)
அம்பாலும்வில்லாலு மங்கையதனில்வளரிக்
கம்பாலும்பட்சிகளைக் கண்டவர்கள்கொன்றனரோ ... ... ... ... (௱௨௰)
மிச்சமுடனிவ்வாறு வேட்டைசெய்யும்போதினிலே
பச்சைமயிற்கூட்டம் பறந்தோடிப்போவதுதான் ... ... ... ... (௱௨௧)
ஆறுமுகனேதெய்வமெனு மன்புடையாணாச்சூழும்
வறுமையெலாம்பறக்கும் வாறுபோலோடினதே ... ... ... ... (௱௨௨)
மானார்களாசை வலையிலகப்பட்டாப்போற்
கானார்முயல்மான் கலைவலையிற்பட்டுழன்று ... ... ... ... ... (௱௨௩)
மட்டார்குழலார் மயக்கத்திற்சிக்கினர்போ
லொட்டிலேபட்டங் குருளுஞ்சிலதுபட்சி ... ... ... ... ... (௱௨௪)
தேகியென்பார்க்கீயாதார் செல்வம்போலங்கிருள்ள
கோகிலங்களுங்கிளியுங் கூடிப்பறந்தனவே ... ... ... ... ... (௱௨௫)
சேனையொருபுறமுஞ் செவ்வேலொருபுறமுங்
கானகத்திலிவ்வாறு கனவேட்டையாடிவரில் ... ... ... ... (௱௨௬)
சுட்டவெடித்தொனியிற் றோகைமயிலானதொன்று
முட்டிப்பறந்து முட்காட்டிலுள்ளேக ... ... ... ... ... ... (௱௨௭)
வன்னமயிற்போல் வடிவுகண்டுவேலவனும்
பின்னெவர்க்குஞ்சொல்லாமற் பின்னேதொடர்ந்துசென்று ... ... (௱௨௮)

அ

கொல்லாமலேபிடித்துக் கொள்வோமெனமுருகன்
நல்லமயிலைப்பின்றொடர்ந்து நடந்தார்வெகுதூரம் ... ... ... ... (௱௨௯)
அந்தவனத்திலப்பா லங்கொருபூங்காவினிலே
வந்தமயிலை வளைந்துபிடித்தனராம் ... ... ... ... ... ... ... (௱௩௰)
தென்னைபலாமுந்திரியுஞ் செண்பகங்கள்தேன்மாவு
மன்னுமயில்கிளைவிளை யாடுவதும்பாடுவதும ... ... ... ... (௱௩௧)
மல்லிகைமுல்லையிரு வாட்சிமுதலானதெலாஞ்
சில்லென்றுபூத்துத் திக்கிற்கமழுவதும் ... ... ... ... ... ... (௱௩௨)
தோகைமயிற்பின்னே தூரவழிவந்திளைத்
தோகைமயிற்கடவுள் சோபமதுதீரவென்று ... ... ... ... ... (௱௩௪)
மாவலஞ்சேர்பூங்கா வனங்கண்டுளமகிழ்ந்து
தேவன்முருகேசனந்தத் தேமாநிழலிருந்தான் ... ... ... ... (௱௩௫)
புள்ளிமயிலைவேலன் புனத்திலேவேலோனும்
வள்ளிமயிலை மணங்கொண்டவாரதுபோர் ... ... ... ... ... ... [௱௩௬]
கானமயிலைத்தொடர்ந்து காவில்வந்தவேளையிலோர்
பெண்மயிலைச்சேரும் பெருமைவந்தெய்தியதாம் ... ... ... ... [௱௩௭]
மாதுபதுமினிப்பெண் மாமமுர்த்தமோகினிப்பெண்
சிதமதிவதனி சிராதிமுகனி ... ... ... ... ... ... ... [௱௩௮]
காமன்குருபீடங் காமகுடவோடங்
காமன்கலைபீடங் காமன்னிமாமகுடம் ... ... ... ... ... ... [௱௩௯]
காமனுக்குவந்தரங்கு காமனுக்குவச்சிராங்கி
காமனுக்குமாதரங்கி காமமதுமாதங்கி ... ... ... ... ... [௱௪௰]
வேதமுனிவரங்க மேலவர்கள்பூசைலிங்கம்
மாதவர்களுதசங்கம் மாமுனிவர்வேதாங்கம் ... ... ... ... ... [௱௪௧]
இந்திராணிசுகிந்திராணி எழில்சேரிரதிக்கிரதி
செந்தாமரைப்பெண் சிறந்திலங்குமோகனப்பெண் ... ... ... [௱௪௨]
பூவுலகிற்சம்மியன் கைபிடித்துச்செய்யாமற்
பூவன்னுந்திருஷ்டித்த புனிதமொருபொற்பதுமை ... ... ... ... [௱௪௩]
சற்றும்வெளியாமல்மதில் தன்னிலொட்டிநில்லாமல்
விஸ்தாரம்பேசி விளையாடுமுருபசித்திரம் ... ... ... ... ... [௱௪௪]
கன்றுமல்லாரதனுற் கட்டாமலென்னாளும்
மன்றுகமழ்மின்னா ரடியருக்கும்பூமாது ... ... ... ... ... ... [௱௪௫]
மீறிவரும்காற்றினிலும் வெய்யிலினிலும்வாடாமல்
நாரியர்கள்வளர்த்த விரஞ்சிதஞ்சேர்செங்கரும்பு ... ... ... ... [௱௪௬]
ஒன்றியேமுட்காட்டி னுள்ளேதிரியாமல்
முன்றில்விளையாடு மோகமுறுதோகைமயில் ... ... ... ... ... [௱௪௭]

கோதுப்பட்டாமற் குன்றிரசங்குறையாப்
போதவரசிருக்கும் புனிதநவரசத்தேன் ... ... ... ... ... [௨௪௮]
சங்குலிலேதனியே காவிருந்துகூவாமல்
மதனகலையோதுபஞ்ச வர்ணக்கிளிப்பேடு ... ... ... ... ... [௨௪௯]
அன்னத்தின்பேடைக் கன்னுள்நடைபயிற்றும்
அன்னத்தின்பேடு அவட்குயெவளீடு ... ... ... ... ... [௨௫௰]
கோதாய்கிறமனுவுங் குன்றுதமார்களிடற்
றேதெனிலுங்கோர்வையிட்டா திலங்குமயில்முத்தாரம் ... ... ... [௨௫௧]
மண்ணிலேமிக்க வடிவஞ்சிறந்தநல்ல
பெண்ணுக்குப்பெண்ணசை கொள்ளவந்தபெண்ணரசி ... ... [௨௫௨]
இவ்வாமொழிற்சிறந்த இன்பமொற்றினமாலையவள்
செல்விமலர்கொய்துவரச் செல்லவேவேணுமென்றார் ... ... [௨௫௩]
சீவிச்குழல்வகுந்து செழுமாமலர்சூடி
காவிவிழிமையெழுதிக் காதினிற்பொன்னோலையிட்டு ... ... ... [௨௫௪]
மாணிக்கக்கொப்புமிட்டு வயிரமூக்குத்தியிட்டு
வானுதலில்ச்செந்தூர வர்ணத்திலதமிட்டு ... ... ... ... ... [௨௫௫]
தங்கப்பணிபூண்டு தாழமணிமாலையிட்டுச்
செங்கைவளைபூண்டு சிறுவிரலிலாழியிட்டு ... ... ... ... ... [௨௫௬]
மருங்கில்ச்சருகையிட்ட வர்ணத்துகில்புனைந்து
பொருந்துகும்பமாமுலைக்குப் பொற்சருகைக்கச்சணிந்து ... ... [௨௫௭]
மார்?சிசின்ன மருங்கிலொட்டியாணமிட்டு
பாதசிலம்புதண்டை பாடகமுந்தானணிந்து ... ... ... ... ... [௨௫௮]
பூரணிமுற்றுனந்தி பொன்னிசிவகாமி
வாரணிந்தகொங்கைநல்லாள் மதனபிசேகவல்லி ... ... ... [௨௫௯]
காந்திமதிமின்னாள் கண்ணாயிசெங்கமலம்
வார்ந்தமஞ்சேர்சொர்ன வல்லியெனுமெல்லியரும் ... ... ..[௨௬௰]
மங்களவல்லி மருதவனம்பூமாலை
தங்கம்மையென்றுயர்ந்தத் தையலர்கள் தங்களுடன் ... ... ... [௨௬௧]
வர்ணமலர்ப்பூங்கா வனம்புகுந்தாரங்குதனில்
மின்னாருந்தானும் விரைந்துமலர்கொய்தனராம் ... ... ... ... [௨௬௨]
மல்லிகையும்பன்னீரும் மருவுங்கொழுந்துபிச்சி
முல்லைமலர்செவ்வந்தி முளரிமலரொடுத்தார் ... ... ... ... [௨௬௩]
வர்ணக்கொடியின் மலருமிகவெடுத்தார்
மின்னார்களங்கோடி வெறிமலர்கொய்தனராம் ... ... ... ... [௨௬௪]
வாட்டமில்லாமொற்றின மாலையெனும்பெண்பெருமாள்
கோட்மேலர்க்கிச்சைவைத்துக் கொம்பனையுங்கூறுவளாம் ... ... [௨௬௫]

புன்னையேசெண்பகமே பூமாதுளையேநீர்
வர்னமலரெனக்கு மனமகிழ்ந்துதாரீரோ ... ... ... ... ... [௱௬௬]
மந்தாரைபாதிரியே வர்னமலரினமே
யென்தாபந்தீர இரங்கிமலர்தாரீரோ ... ... ... ... ... ... [௱௬௭]
குங்குமக்காவே குளிர்ந்திலங்குந்தேமாவே
யெங்குழலிற்சூட யினியமலர்தாரீரோ ... ... ... ... ... ... [௱௬௮]
மாவேசந்தானமே மயிலேயிரங்கியுங்கள்
பூவையெனக்கீர்தால்ப் புண்ணியமும்வாராதோ ... ... ... ... [௱௬௯]
பச்சைக்கிளியினங்காப் பண்மலரைக்கண்டுமிக
யிச்சையுற்றேன்கொய்துநீ ரெங்கையிலேதாரீரோ ... ... ... [௱௭௰]
செண்பகத்தில்மேவுமெழில்ச் செண்பகமேயுங்களிடம்
வம்பகத்தில்க்கண்டபுஷ்ப மத்தனையுந்தாரீரோ ... ... ... ... [௱௭௧]
மாவிலேகூவும் வர்னவரிக்குயிலே
ஆவலுற்றேன்பூவையென தங்கையிலேதாரீரோ ... ... ... ... [௱௭௨]
பூவையேயிக்காவில்ப் போதவேபூத்திருக்கும்
பூவையெல்லாங்கொய்துகையில்ப் போட்டுவிடலாகாதோ ... ... [௱௭௩]
மாடப்பிராவினங்கா வர்னமலரையெல்லாம்
தேடியேகொய்துகொய்தென் செங்கையிலேதாரீரோ ... ... ... [௱௭௪]
என்றங்கேமின்னு ளெழிலாறும்பூங்காவில்
ஒன்றியாய்நின்றங்கே யோதுமொழியதனை ... ... ... ... [௱௭௫]
காதில்விழுந்த கணத்திலேவேலோனும்
யேதவிதுவசன மெனவெழுந்துபார்த்தளவில் ... ... ... ... [௱௭௬]
மடகனகமுற்றவெழில் மாதைநிகரான
மோகனப்பெண்ணை முருகேசன்கண்டவுடன் ... ... ... ... [௱௭௭]
அங்கம்புளகிதமாய் ஆச்சரியமாகியன்று
மங்கையவள்முன்புசென்றவ் வாறுமொழிந்தனராம் ... ... ... [௱௭௮]
காமன்றதியோ காந்திருவப்பெண்ணரசோ
பூமலரின்மாதோ புனிதமுறுமேனகையோ ... ... ... ... ... [௱௭௯]
இந்திராணிப்பெண்ணோ யெழிலாருருவசியோ
யெர்தமின்னொன்று யெங்கோனுமய்யமுற்று ... ... ... ... [௱௮௰]
கண்ணிமைப்பூம்பூமியிலே கால்வைக்கக்கண்டேமையன்
பெண்ணிவளுமிப்புவியிற் பெண்ணென்றுதான்மகிழ்ந்தார் ... ... [௱௮௧]
அவ்வேளைதன்னி லரவிந்தமாமலரைச்
செவ்வேளெடுத்துமந்தச் செவ்வேள்மேலேவிடவே ... ... ... [௱௮௨]
ஆதிவள்ளிக்கண்வலையி லகப்பட்டாப்போலுமையன்
மாதுநெற்றினமாலே மான்வலையினுள்ளானார் ... ... ... ... ... [௱௮௩]

மாரனங்கேமென்மேலு மலரம்புவிட்டளவில்
ஆறுமுகத்தையனு மின்னுள்தனைப்பார்த்தேதுசொல்வார் ... ... [௱௮௪]
பேரோதுவோது பெண்ணரசிசீதளியே
தார்வனத்தில்வந்த தங்கமையைநீர்சொல்லாயோ ... ... ... [௱௮௫]
மண்ணிலடிவைத்தீர் மலர்ப்பாதம்நோகாதோ
கண்ணிலெவர்கண்டாலுங் கண்ணேறுதையாதோ ... ... ... ... [௱௮௬]
அன்றயனுமின்று ரழகையெல்லாமெடுத்து
ஒன்ருய்த்திரட்டி யுனைப்படைத்துவிட்டானோ ... ... ... ... [௱௮௭]
காமுறுகாமுனிவர் கையெடுத்துக்கும்பிடவோ
ஓமுடிவான்பிரமமா வுமைப்படைத்துவிட்டானோ ... ... ... [௱௮௮]
அமரருடலோகத் தரசாய்வருவோர்களுத்
தமதுபட்டங்கொடுக்குந் தையலரும்நீர்தாமோ ... ... ... ... [௱௮௯]
அன்னுளில்பர்ப்ப னதிசவாமளிக்க
முன்னுளவதரித்த மோகினிப்பெண்ணீர்தானோ ... ... ... ... [௱௯௰]
அன்பகத்தாலீசன் அன்றெரித்தமன்மதனைப்
பின்னெழுப்பிக்கொண்டதொரு பெண்ணவளும்நீர்தாமோ ... ... [௱௯௧]
ஆடல்மதருபன் அருச்சுனனையன்னுளில்
பேடியெனச்செய்தருளும் பெண்ணவளும்நீர்தாமோ ... ... [௱௯௨]
மாலுகந்துபின்துயர்ந்த மால்மகளும்வேதனவன்
நாலுமுகமானதுமுன் னுலையேபெண்ணரசி ... ... ... ... ... [௱௯௩]
மூந்திமதிதேவி மூவொன்பதொன்பவரில்
நந்தாதமோகனப்பெண் நாலரம்பொருளாளோ ... ... ... ... [௱௯௪]
நந்தாதிரவிகுல ராஜாகுமாரியுமோ
இந்துகுலமன்னவர்க ளீன்றெடுத்தபெண்ணமைசோ ... ... ... [௱௯௫]
அன்னத்தின்தூவி யணிச்சமலாரனதிலும்
பொன்னடிவைத்தாலும் பொக்களமுங்கொள்ளாதோ ... ... ... [௱௯௬]
செங்கமலம்போன்ற திருக்கரத்தாற்பூங்காம்பை
இங்கேநீர்கொய்தி ரொழில்நகமும்நோகாதோ ... ... ... ... [௱௯௭]
தங்கக்கொடிபோன்ற சன்னயிடையானதுமுன்
கொங்கைமலையைச்சுமந்து கொண்டதரிதரிதே ... ... ... ... [௱௯௮]
கரிகையேயுந்தனுட சன்னமுத்தர்தந்தாக்கால்
வாரியிலேயுற்றமுத்து மாலையாய்ச்சூட்டேனோ ... ... ... ... [௱௯௯]
தங்கமலைக்கொங்கைதொட்டுத் தழுவயெனைச்செய்தாக்கால்
தங்கமலையிலுனைச் சாசுபதமாகவைப்பேன் ... ... ... ... ... [௨௱]
முல்லைமல்லெடுத்தீர் மொய்குழலீர்முல்லையிலே
மில்லெடுத்துமிச்ச மெனக்கதனைத்தாரீரோ ... ... ... ... ... [௨௱௧]

ஆவலுற்றேனுன்னுடைய தாபரணந்தான்கொடுத்தால்
தேவரமுதமென்ற செய்கையதுபோலாகும் ... ... ... ... ... [உ௱௨]
காமனரண்மனைக்குக் காவலாயென்னைவைத்தால்
மாமின்னேசின்னவனை வைத்தங்கேபாரோனே ... ... ... ... [உ௱௩]
வாழைநடுப்பண்ணை வயலையெனக்களித்தால்
பாழேபோகாமற் பயிரேற்றிக்கொள்ளேனோ ... ... ... ... [உ௱௪]
காமனதுகோட்டைக்குக் காவலாயென்னைவைத்தால்
சாமத்திற்சாமம் சாரிசுற்றியேவருவேன் ... ... ... ... ... [உ௱௫]
ஆலடியிலோடைவய லானதனைநீயளித்தால்
கால்வழியைத்தண்ணீர்விட்டுக் கட்டிவைத்துக்கொள்ளேனோ ... [உ௱௬]
தங்கமேமேகலையே சற்றேநெகிழ்த்துவிட்டுன்
கொங்கைதனைக்கண்கண்டு கொண்டாலதுபோதும் ... ... ... [உ௱௭]
பெண்ணரசியுன்னுடைய பின்னழகுமுன்னழகும்
விண்ணரசர்கண்டால் விருமைபிடியாரோ ... ... ... ... ... [உ௱௮]
யேதுரையுஞ்சொல்லாமல் யேந்திழையேநிற்பதமுன்
மாதவர்கள்சொன்ன மௌனமுறுதீட்சையுண்டோ ... ... ... (உ௱௯)
செப்புவதெல்லாமுனது செவியிலேகேளாமல்
சொப்பென்றுமாணிக்கக் கொப்போஅடைத்ததடி ... ... ... (உ௱௰)
நாரஞ்சுபோல்விழியா லேரிட்டுப்பாராயோ
ஆரஞ்செனுங்கொங்கை யானதுவைத்தாராயோ ... ... ... ... (உ௱௰௧)
கண்ணேநெகண்ணிணைத்தால் சலவிமதஞ்செய்திடலாம்
என்னபயனுமில்லை யென்றூர்குறவினிலே ... ... ... ... ... (உ௱௰௨)
வண்ணமுலைமாதே நீ வாய்திறவாதேபோனால்
கண்ணாலேபார்த்தாலுன் கருத்தரிந்துகொள்வேனே ... ... (உ௱௰௩)
கூங்கையாய்த்தென்றலெனுங் காற்றைமதனேவுவனோ
காங்கைமுன்னேகொம்புவைத்தேன் கண்கண்டாற்போதாதோ ... (உ௱௰௪)
காமனுக்குக்கண்ணதுவுங் கண்டவிடத்திலென்று
பூமிவழக்கமதை பெண்ணேயறிந்திலையோ ... ... ... ... ... (உ௱௰௫)
ஆறில்லொண்டிலாறேயுன் னறிலொன்றுலெந்தனக்கு
ராரிலொன்றசொன்னலெ னங்கங்குளிர்ந்திடுமே ... ... ... (உ௱௰௬)
வன்னமயில்க்காய்ப்பூ வனத்தில்வந்தவேளையெந்தன்
கண்ணிலுற்றபெண்மயிலைக் கடத்திவிட்டுப்போவேனோ ... ... (உ௱௰௭)
புத்தமூர்தமாதே நின் பொற்பதுமைபோலவுமோ
ருத்திரஞ்சொல்லாதநின்று லுன்மனதுகல்லாமோ ... ... ... (உ௱௰௮)
வாரியழவிட்டாலும் வானழவுங்கண்டாலுங்
காரிகையேயுங்கள் கருத்தரியக்கூடாதே ... ... ... ... ... (உ௱௰௯)

எழிலேழிரண்டிக ரென்றுமுகப்பெண்ணாசி
எழில்வருமென்றதனை லேத்சொல்லலாகாதோ … … … … (௨௨௰)
சூரியனும்பாண்டியனுந் தோகையர்கள்தன்னழகை
பாரப்பசையடக்கப் பண்டுவந்தபேரிவரோ … … … … … (௨௨௧)
யேர்திளமையேயுங்கள் நடைக் கோகாதென்றயனும்
அந்திரியஞ்சரியா யன்றுவைத்தக்கொண்டதுதான் … … … (௨௨௨)
முப்புரத்தைவெல்லு முன்னிலையாயீஸ்பரனும்
பதுமினியேயுங்கள் பகையென்றடக்கினரோ … … … … (௨௨௩)
ஈசனுக்குவில்லோனும் யாமுமேயுங்களுட
பாசக்கயல்விழிக்கு பகைலயமிகவறிந்து … … … … … (௨௨௪)
கண்டுகொண்டோநாங்கள் கைப்பிடியாகவதனை
அன்றுபிடித்தோமின் றழவும்விடவில்லையடி … … … … (௨௨௫)
பண்டுதானிந்தப் பகையடக்காதேபோனல்
ஒன்றொடியீருங்களுக்கு உல்லாசமெய்திடுமோ … … … … (௨௨௬)
மஞ்செல்லாங்கூடி வாய்வெறிவியோடுவது
வஞ்சியேயுன்கூந்தல் வடிவுதனக்கஞ்சியல்லோ … … … … (௨௨௭)
பேடையன்னங்களெல்லாம் பெண்ணேயுனதுநடைக்
கோம்போதா தெனவோடிப்போகுதுகாண் … … … … …(௨௨௮)
பூங்கொடியேயுன்மொழிக்குப் போதாதெனவுமிப்போ
மாங்குயில்களெல்லாம் வாய்திறக்கவில்லையடி … … … … (௨௨௯)
பேடையன்னங்கள் பெண்ணேயுன்சாயலுக்கு
ஈடில்லையென்றேதா னிங்கோடிப்போகுதடி … … … … (௨௩௰)
மானினங்களெல்லாம் வந்துபார்த்தோடுதடி
தேன்மொழியேயுந்தன்விழிச் செம்மானைக்கண்டல்லவோ … … (௨௩௧)
ஆரிவரோவென்று னகத்தில்நினைந்தனையோ
பேருனாசசொல்லுகிறோம் பெண்ணரசிநீர்கேளும் … … … … (௨௩௨)
ஆறுவீடுண்டங்கே யாறுவீடுண்டிங்கே
ஆறெழுத்திலுள்ளாக வாறுதிருவாறுமுகம் … … … … … (௨௩௩)
திருமேவுஞ்சேர சமஸ்தானம்வாழ்கவந்த
பெருவயலூர்மேவும் ரண பெலிமுருகர்நாமாகும் … … … … (௨௩௪)
பேதையேயுன்னைப் பிரிவதில்லையென்றுரும்
நீதயவுசெய்வாய் நெடுநேரமாகுதடி … … … … … … (௨௩௫)
கல்லுருகுங்காலங் கழுகறியும்வாரதுபோல்
மெல்லிநல்லாள்நெஞ்ச மிரங்குங்குறிப்பறிந்து … … … … (௨௩௬)
எறும்விசந்தன்னை யிறங்கக்குழையடிக்கும்
வாறுபோலய்யனுமிவ் வாறுனாத்துநேரணுகி … … … … (௨௩௭)

அங்கைதனிலே முருகையன்பிடித்தளவில்
அங்கமெல்லாம்பசலை யாகவுமேகூச்செறிந்து ... ... ... ... (௨௩௮)
முல்லையிருவாச்சி முகிழாறுமல்லிகைகள்
எல்லாம்படர்ந்தடர்ந்த இன்பமுறும்பந்தலினும் ... ... ... ... (௨௩௯)
பூவாயுதிர்ந்து பொதிந்தாறும்பூவணையில்
மேவியதிலிருந்து வேளும்ரதியுமென ... ... ... ... ... ... (௨௪௰)
கோதிக்குழல்முடித்துக் கொந்தார்மலர்சூடிப்
பாதிச்சருளருந்திப் பவளமிதழூறலுண்டு ... ... ... ... ... (௨௪௧)
கொங்கைபிடித்துக் குணலங்கள்பாராட்டி
அங்கத்துகில்நெகிழ்த்து ஆலிங்கனவிதங்கள் ... ... ... ... (௨௪௨)
மதனநூற்சொன்ன மார்க்கமெல்லாம்பாராட்டி
மதியினுடன்மதிபோல் மலர்முகங்களொன்றுபட ... ... ... (௨௪௩)
இன்பமொருபொற்கொம்பி லெழிலாரும்பூங்கொடியும்
பண்பாகச்சுற்றிப் படர்ந்தாடும்பாவனைபோல் ... ... ... ... (௨௪௪)
கொங்கையுந்தொண்டினும் நகம்பதியவுங்கலனும்
மங்குல்நிகருங்குழலில் மஞ்சரியளுந்துவள ... ... ... ... (௨௪௫)
இரண்டுடலுமாவியொன்று நேசமொன்றும்பாசமொன்று
வென்றுவருகின்றதந்த வேளையிந்திரபோகம்வந்து ... ... ... (௨௪௬)
போகசுகபோகமத னேகவிதமேபெருகத்
தோகைமயிலாளுஞ் சோபமுற்றுத்தானெழுந்து ... ... ... ... (௨௪௭)
தோய்ந்தவமோரத் தோகையுடன்தானும்
வாய்ந்தசுனைநீராடி மகிழ்ந்திருக்குமவ்வேளை ... ... ... ... ... [௨௪௮]
வேட்டையிலேவந்த தள வீரர்களைக்காணாமல்
காட்டினிலேநின்றமுரு கையனையுங்காணாமல் ... ... ... ... [௨௪௯]
போனார்மயிலின்பின் போனதடிவழியே
தானைபதியான தளவீரர்தான்துயர்ந்து ... ... ... ... ... [௨௫௰]
அங்கவர்கள்கூடிவரு மாரபாரங்கள்தனை
எங்கோன்முருகேச னேரிட்டுப்பார்த்தளவில் ... ... ... ... ... [௨௫௧]
தாய்காணாப்பிள்ளையைப்போல்த் தளர்ந்தயர்ந்துவாரதினால்
போய்வாரேன்பெண்ணேயிப் பூவனத்திலேயிருங்காண ... ... [௨௫௨]
யென்றுரைத்து ஐய னேந்திழையையங்கிருத்தி
அன்றுவசமானமயி லானதுங்கொண்டேகினராம் ... ... ... [௨௫௩]
சிந்தைமதிகண்ட திரைகடல்போலாத்துமய்யன்
பாதமதிலேவீர பாகுமுதலோர்பணிந்தார் ... ... ... ... ... [௨௫௪]
நடம்புரியும்வான்பரிமேல் நாதனங்கேயேறினராம்
விடம்பன்பராக்கென் றெச்சரிக்கைகூறினராம் ... ... ... ... [௨௫௫]

பக்கமிதற்கவரி பாவாடைவீசிவர
தக்கவெளிச்சந்திரன்போற் றுழச்சூடைநிழற்ற ... ... ... ... [௨௫௬]
கோதில்லாச்சேவற் கொடியிலங்கவாத்தியங்கள்
ஓசைக்கடல்க ளொற்றுமுழங்கிவர ... ... ... ... ... ... [௨௫௭]
மிச்சமுடன்பகைஞர் மீன்றுவரயிவ்வுலகை
இரட்சிக்கவந்த ரனைபெலியின்மாமுருகன் ... ... ... ... ... [௨௫௮]
மேவும்பெருவயலான் மென்னுந்திருநகரில்
கோவினில்ச்சென்று குமரன்தனித்திருந்தார் ... ... ... ... [௨௫௯]
வாரோமிருவெனப்பூ வனத்திலேவைத்தேகும்
ஆறுமுகத்தய்யனும்பி னங்குவரக்காணமல் ... ... ... [௨௬௦]
கோடையிலேசங்கூங் கொந்தார்மலர்ப்போலே
வாடினளந்த வனமெல்லாந்தேடலுற்றாள் ... ... ... [௨௬௧]
பெண்ணோர்மைகுன்றாப் பெண்ணரசிசெங்கமலக்
கண்ணீர்சொரியநின்று காரிழையுமேதுசொல்வாள் ... ... [௨௬௨]
தையலவள்நெஞ்சுத் தகமையறிவோமென்று
மையலயிட்டெப்பூங்கா வனத்திலொளித்தீரோ ... ... ... [௨௬௩]
என்னைவிட்டெச்சற்று மினைபிரிந்துபோவாரா
பெண்ணைவிட்டுநீரும் போவதுவுமெங்குமுண்டோ ... ... [௨௬௪]
அண்டர்தொழும்வேலனுக்கென் னுசைசலித்ததுவோ
இராக் கண்டகனுவெனக்கு கைமேற்பலித்ததுவோ ... ... [௨௬௫]
தாரமிருவருக்குஞ் சக்களமையாகுமென்றே
ஆரிவளோவென்று வகற்றிவிட்டுப்போனாரோ ... ... ... [௨௬௬]
அந்தவுலகிலுள்ள அமரர்கோன்வந்தாரோ
கந்தருவரோகிருஷ்ணன் கண்படாமன்மதனோ ... ... ... [௨௬௭]
கண்ணமிமெரக்கி காந்தருவிகண்டாளோ
வள்ளிதனைநினைத்து மாநகரஞ்சென்றாரோ ... ... ... [௨௬௮]
ஆறுதலையிருக்க வாறுதலைவையாமல்
ஆறுதலையுற்றவன்செய் யஞ்சுதலைவைத்தானே ... ... ... [௨௬௯]
அன்றுளெனக்கெ லயனெழுத்துவாரிதுவோ
வர்ணமலவொடுக்க வந்தவேளைப்பயனோ ... ... ... ... [௨௭௦]
மாவிதஞ்சொல்க்காட்டியென்னை மருவிக்கொழுக்கோட்டிசெய்து
போவெனவென்றோட்டிவிட்டுப் போனனவன்பாட்டில் ... ... [௨௭௧]
என்னெஞ்சம்போலே யிருக்குமெனவேநினைந்தேன்
வன்னெஞ்சமென்றறிய மாட்டாதேபோனேனே ... ... [௨௭௨]
தோகைமயிலானைச் சேர்ந்தமையினாலேயென்
மோகமையினாலேநான் மோசமையலானேனே ... ... ... [௨௭௩]

மையினுலேகான்றான் மையாலோர்பேதை
மையினுலான்சொக்தேன் மயிலோனைக்காணேனே ... ... [உஎச]
தந்திமுகவனுக்குத் தாரமேலாசையுண்டோ
பிந்திவருந்தம்பிக்கிப் பெண்ணுசையேன்தானோ ... ... ... [உஎரு]
வள்ளிதெய்வானையெனு மாலையிட்டப்பெண்ணிருக்கத்
தெள்ளிதமாய்த்தேசத்தில் சிறையெடுக்கநீதியுண்டோ ... ... [உஎசு]
கந்தனையேநான்பிரிந்த சந்தனையேபாரியென்ற
கந்தனையேசென்று விக்கந்தனையுஞ்சொல்லாரோ ... ... [உஎஎ]
அன்னைகுறியாளோ அசுகைதெரியாதோசெய்
கன்னமறியாளோ யெனைக்கண்டோர்சிரியாரோ ... ... ... [உஎஅ]
சேடியர்கள்தங்களுடன் செழுமாமலரொடுக்க
வீடுவிட்டுவந்த வேளைப்பயனிதுவோ ... ... ... ... [உஎகூ]
போய்வாரோனிங்கினைப் போனகுமரேசனென்னைப்
பாய்மரத்தில்க்காகம்போற் பாதவிக்கவிட்டானே ... ... ... [உஅ௰]
மனதுகந்துவேலவனை மருவிப்பிரிந்ததுதான்
கனவுகண்டாப்போலுங் கதையுரைத்தவாறுச்சே ... ... ... [உஅக]
அழகில்மிகுர்தமுரு கையனுக்குச்செய்தநன்றி
விளலுக்கிறைத்த நீர்விதம்போலாச்சுதையோ ... ... ... [உஅஉ]
கள்ளனிவனெனைத்தன் வசமாய்ச்செய்வதற்கென்
உள்ளமதனை யுலைமெழுகாய்ச்செய்தானே ... ... ... [உஅங]
இஷ்டமுறவிப்போ யெனக்கவனுஞ்சொன்னமொழி
பட்டமரந்தளுக்கும் பால்தருமேவெம்புலியும் ... ... ... [உஅச]
என்னுமெனதிடத்தி லிருப்பிரோவென்றுசத்தியம்
பண்ணுமென்றுஞ்சொல்லியும்நான் பாசாங்குசெய்தேனோ ... [உஅரு]
கந்தனிங்கேவந்ததுவுங் கைகலந்துபோனதுவும்
இந்திரசாலம்போ லிருக்குதினியென்னசெய்வேன் ... ... [உஅசு]
உறவாகவேமுருக னுண்டென்றிருந்ததற்கு
இரகில்லாப்பட்சியைப்போ லெனைமயங்கச்செய்தானே ... ... [உஅஎ]
பெருவிதம்போய்நானும் பிதற்றுவதைக்கண்டபெண்கள்
ஒருமாமுக்காணியதி னூட்டிங்கேவைத்துறைப்பார் ... ... [உஅஅ]
அன்னுமெருது சுமக்கும்பொதியெனவும்
வின்னுமுலகமொழி விண்ணுலகிற்கண்டேனே ... ... ... [உஅகூ]
ஆடவர்கள்பெண்ணின்மே லாசையதுகொள்வதன்றி
ஆடவர்மேற்பெண்ணாசை யானதுவுமென்னளவோ ... ... [உகூ௰]
தினையத்தினையள்நன்றி செய்தாலதனைநல்லோர்
பனையத்தினையாகப் பாவிப்பாரென்றுரைப்பார் ... ... ... [உகூக]

யேற்றமுடனுமுருகேசனுக்குச்செய்தான்றி
ஆற்றிற்கரைத்தபுளி யாவதனைப்போலாச்சே ... ... ... ... (௨௯௨)
நம்பிமுருகேசனுமென் றனாநமக்கென்றிருந்தேன்
கொம்பிழந்தமந்திதனைக் கொப்பாகவிட்டானே ... ... ... ... (௨௯௩)
ஆமைகிணற்றி லனிகொம்பிலானதுபோல்
காமசிங்கிபூட்டிக் கடத்திவிட்டுப்போனானே ... ... ... ... ... (௨௯௪)
இடுக்கும்வழியிற்பெண் டிருக்கவாவென்றதுபோல்
பிடித்தபிடியாகப் பெண்டிருக்கச்செய்தானே ... ... ... ... (௨௯௫)
நாட்டிலுள்ளோர்கேட்டால் நகைக்கும்படியாச்சே
நட்டுச்சேர்க்கும்பாட்டுசெகு மிருந்தேனிக்குமரி .. ... ... ... ... (௨௯௬)
வேட்டைசெய்யவென்றிங்கே வேலவனார்வந்ததுவும்
நாட்டமுடன்பூவெடுக்க நானிங்கேவந்ததுவும் ... ... ... ... (௨௯௭)
உண்டைபோயநேரங்கொக்கு உயரவரும்வேளையது
இரண்டுமொன்றானகதை நின்னளவில்மெய்யாச்சே ... ... ... (௨௯௮)
கோட்டிக்கெல்லாமிசைந்து குமரனுக்குச்செய்தநன்றி
காட்டுக்கெறித்தநிலா கானல்மழைபோலாச்சே ... ... ... ... (௨௯௯)
வேண்டிமுருகேசனைநான் மேவிப்பிரிந்ததிப்போ
மாண்டமரத்துக்கிறைத்த மண்ணுந்தண்ணீராச்சே ... ... ... ... (௩௱)
நலத்தைக்கெடுப்பதற்கு நானொருத்திபெண்பிறந்தேன்
குலத்தைக்கெடுக்குமந்தக் கோடாலிக்காம்பானேன் ... ... ... ... (௩௱௧)
மரியாதைதங்காதோ மன்றோரறிந்தாக்கால்
பொறிமூடியதனைலைப் போலிருக்கலானேனே ... ... ... ... (௩௱௨)
பெண்ணொன்றுலெங்குமெந்தப் பேயுமிரங்காதோ
நின்னையும்பார்த்தானோ நீலனந்தவேலோனும் ... ... ... ... (௩௱௩)
வீணாலேவீணுக்கு வாணால்வருந்தினப்போல்
தோணமையால்முருகன் சொல்லுக்கிணங்கினேனே ... ... ... (௩௱௪)
பரிந்தெவனாயும்பாயும் பசுவையரவணைத்தச்
சொறிந்துமணிகட்டிவிட்ட தோதகம்போற்செய்தானே ... ... ... (௩௱௫)
ஏணிவைத்தேவுயர யேறவேசெய்தபின்னே
ஏணியெடுத்தவர்போ லென்னைவிட்டுப்போனானே ... ... ... (௩௱௬)
அசல்விட்டாமக்க ளவஸ்தைக்குதவாது
நிசமென்றுலகமொழி நின்னளவிற்கண்டேனே ... ... ... ... (௩௱௭)
பாரிலேபெய்யும் பனியைநம்பியேர்ப்பூட்டும்
வாறுபோலேமுருகன் மையலுக்குள்ளானேனே ... ... ... ... (௩௱௮)
கானலையேதண்ணீரென்று கண்டுமகிழ்ந்தோடுமந்த
மானினத்தைப்போலே மதிமறந்துபோனேனே ... ... ... ... (௩௱௯)

இளியூரவனைமுன்னே கெய்கைகொண்டான்கொன்றுனந்தப்
பழிதீரவன்மகன்றன் பரியென்றேமாறனுற்றான் ... ... ... (௱௰)
கடம்பன்குடிகொண்டேனையுங் கைகழுவச்செய்தானே
கடம்பன்விடுவாமென்று கருத்தறியலானேனே ... ... ... ... (௱௰௧)
நாடெல்லாம்பேச்சாச்சே நன்குலத்துக்கேச்சாச்சே
சாடைசொல்லலாச்சே நான் தலைகவிழ்ந்துநிற்கலாச்சே ... ... ... (௱௰௨)
கற்புநிலைபோச்சேநான் காமியென்றும்பேராச்சே
செப்பினதும்பொய்யாச்சேநான் சேப்தான்றிவீணாச்சே ... ... ... (௱௰௩)
பொய்யுமெய்யாச்சே ஐம்புலனும்நிலைபோச்சே
மெய்யும்பொய்யாச்சே மதவேளும்பகையாச்சே ... ... ... ... (௱௰௪)
வாய்ச்சங்கரிமருகன் மலைமுருகனேர்தனையும்
மெச்சிங்கணைந்தசுக மிந்திராணிக்கெய்த தே ... ... ... ... ... (௱௰௫)
ஆவியொன்றுகூடிரண்டாய் ஆறுமுகத்தய்யனேனை
மேவுசுகபோக மிந்திராணிச்செய்தாதே ... ... ... ... ... (௱௰௬)
வேலவனுமென்னைபின்னுள் மேவிக்கலந்தசுகம்
மாலவன்றன்றேவியின்ப மானவர்களுங்கிட்டாதே ... ... ... ௱௰௭)
கொக்கோகமார்க்கமென்றுங் கொனுச்கோட்டிசெய்தணைந்த
வெட்கத்தைநானும் வெளியிலேசொல்வேனே ... ... ... ... (௱௰௮)
இந்தக்கவடுசெய்வா னென்றுசற்றும்நானறிந்தால்
முந்திபிடித்து முடிந்துகொள்ளமாட்டேனே ... ... ... ... (௱௰௯)
கொண்டபெண்ணைக்காட்டில்விட்டிங் கோடியவன்போவானோ
வழியிற் கண்டபெண்ணென்று கடத்திவிட்டுப்போனானே ... ... (௱௨௰)
நாளைப்பின்னென்றுசொல்ல நாவெழும்பவிட்டானே யிவ்
வேளைபகலாகுமென் றெண்ணியவன்பார்த்தானே ... ... ... ... (௱௨௰௧)
புத்தியுள்ளானென்னையிந்தப் பிழைமோசஞ்செய்தவன்முன்
னெத்தனையோபெண்கள்தனை யிவ்வேசஞ்செய்தானோ ... ... (௱௨௰௨)
மையால்மருந்தால் மயக்குவார்கள்மானோரை
மையுமருந்துமவன் வாய்மொழிக்கெட்டாதே ... ... ... ... (௱௨௰௩)
வீடுதனைநோக்கி விரைந்தோடிப்போனானே
கூடவந்தபெண்கள்தனைக் கூப்பிட்டுக்கொண்டானே ... ... ... (௱௨௰௪)
பொய்யாதேநானும் புதப்பானையாயிருந்தேன்
அய்யோகரிப்பானை யாக்கிவிட்டுப்போனானே ... ... ... ... (௱௨௰௫)
வாகனத்தைச்சேரும்பொற்றின மாலையென்றேபேர்வடுகன்
வாகனத்தையோட்டு வச்சிரத்தைச்சொல்லாச்சே ... ... ... ... (௱௨௰௬)
வாடையிலேயென்னை மனமுருகச்செய்தணைந்து நான்
வாடையிலேபாவி மறந்துவிட்டுப்போனானே ... ... ... ... (௱௨௰௭)

ஆறெழுத்தானைச்சேர்ந் தலைவாளனவேபெத்
தாறெழுந்திதுவோவென் தலையெழுத்தோசுரனே ... ... ... [௱௨அ]
சோதிபனுசத் தொழுவோர்கள்தங்களுக்குத்
தாதவித்தாலுமந்தத் தாதியெங்குமோதாதே ... ... ... ... ... [௱௨௯]
ஆறுமுகமல்லாது யாறுமுகம்பார்ப்பானோ
ஆறுமுகமற்றொருமின் னாறுமுகம்பார்ப்பாரோ ... ... ... ... [௱௩௰]
வேலனையேவிட்டுவெழி வேலவனைபாரோடு
மாதைதனைத்தூ யாலனையென்செய்திடுமோ ... ... ... [௱௩௧]
நச்சபூப்பியனும் ராசியிலேகோகிலமும்
இச்சமயமானதிலே யிம்மோகஞ்சானோமே ... ... ... ... ... [௱௩௨]
என்னமனங்கொண்டானோ பின்னிருமேனியென்றுசொல்லி
முன்மனைக்கொண்டார்மேல் மோகமுற்றுப்போனானே ... ... ... [௱௩௩]
உண்டிருக்கமாட்டாம லுளத்தித்தவித்தவர்போல்
கண்டவர்களைசவும்நான் காமப்பேய்கொண்டேனே ... ... ... [௱௩௪]
மானேயவன்னைவச மானேனெனக்குகிச
மானைநான்பிரிந்தபெரு மானைநீர்காணீரோ ... ... ... ... ... [௱௩௫]
காலில்வருங்கலையென் கண்ணுமுறங்கலையே
ஆனதுசொல்வாரில்லையே யென்னைவிட்டுப்போகலையே ... ... [௱௩௬]
மேனுங்குரிகினனே யென்மேனுங்கரிகினனே
வாயுங்குரிகினேனே மனதுமுருகினேனே ... ... ... ... ... [௱௩௭]
கோகிலமேயென்னை கொண்டாகிலுமேகிச
மாகிலுமேசொல்லி விட்டாகிலுமேசென்றாரோ ... ... ... ... [௱௩௮]
கோகிலமேயென்னையுமே கூடிவிட்டாகிலுமே
யாகுவமேழுதிறவும்பின் னாகிலுமேவந்தாரோ ... ... ... ... ... [௱௩௯]
கொக்கேபூர்மார்க்கம்வருங் கொக்கேயிக்காவினிலே
கொக்கேமேல்கொண்டிற் குமரன்வரக்கண்டீரோ ... ... ... [௱௪௰]
அண்டினமேயுங்களோநா னண்டினமென்காதலனை
கண்டினமேயில்லையோ கண்டபடிவிண்டிடுமே ... ... ... ... [௱௪௧]
நாரையேயென்னேச நாரையேமாமுருகன்
நாரையேயிவ்வழிபோ நாரையேகாணீரோ ... ... ... ... ... [௱௪௨]
வண்டுகாவுங்கள்மேல் வண்டனுகாமல் நீல
கண்டன்மகனையிங்கே கண்டீரோகாணீரோ ... ... ... ... [௱௪௩]
விறென்றேபறந்து வெதிமலர்த்தேனையுண்டு
கிறென்றேசங்கீதங் கீர்வண்டேகாணீரோ ... ... ... ... ... [௱௪௪]
குறென்றெனைவிளித்துக் கொண்டிருக்கச்சொல்லிவிட்டு
சறென்றெழுந்துசென்ற சண்முகனைக்காணீரோ ... ... ... [௱௪௫]

பாதரியேயென்னையுமிப் பாதரியேயென்றுடனே
மாதரியேசெய்தவன்போம் மாதரியைக்காணீரோ ... ... ... ... [௧௪௬]
மாதலையேயெந்தனக்கு மாதலையேபோட்டவனும்
மாதலையேயுற்ற வனத்தில்விட்டுப்போனானே ... ... ... ... [௧௪௭]
மந்தாரமேயவன் வசந்தாரமேயானேன்
மந்தாரைகொண்டான் மருகனையுங்காணீரோ ... ... ... ... ... [௧௪௮]
மால்துயன்றவாலேயவன் வஞ்சகந்தன்னாலே
மால்தந்தவேளை வழியில்வரக்காணீரோ ... ... ... ... ... ... (௧௪௯]
பூவாதவாலேநான் புத்தியறியாதாலே
நாவாலேசொன்னதற்கு நான்மாலையாகினனே ... ... ... ... (௧௫௰)
ஆலேமுன்னாலே மதமாலேயணிந்தவன்கண்
ணாலேபாராமல்வெறும் பாலேவிட்டுப்போனானே ... ... ... ... (௧௫௧)
ஆலேமுன்னாலேமத மாலேவருவதெந்தன்
நாலேயென்பெண்புத்தி யாலேயிவ்வாறானேன் ... ... ... (௧௫௨)
என்னமதியாலே யெத்தனையோவாயாலே
சொன்னவகையாலே தோய்ந்தேனேமாலாலே ... ... ... ... (௧௫௩)
ஆராலேமுன்விதியை யப்பாலேதள்ளுவரோ
போராலேயென்ன பிழைபாலேபோனேனோ ... ... ... ... ... (௧௫௪)
பூமாலேயென்னைப் புரமாலேதாணிணைந்து
மாமாவில்க்கொண்டிவ் வழிமாவில்ச்சென்றானே ... ... ... ... (௧௫௫)
மாவேயெனக்குமின்ப மாவேவெகுவிதமும்
மாவேயணைந்துவஞ்ச மாவேயின்றேகினனே ... ... ... ... (௧௫௬)
மாபாயமாவே மரிவிப்புரமாவே
போமாயஞ்செய்தார் புரமாவேபோனானோ ... ... ... ... ... (௧௫௭)
என்னதிறமாலே யெந்தன்மதமாலே
என்னையணைந்துவிட்டு யெவள்பிரமாலேகினரோ ... ... ... (௧௫௮)
வாசக்கடம்பேநீ மாலையல்லோவேலனுக்கென்
னாசைக்கடம்பே யடம்பேசெய்தேகினனோ ... ... ... ... ... (௧௫௯)
செண்பகமேயென்னைவிடத் தென்பகமேயுற்றதினால்
வம்பகமேசெய்தெனையு மறந்துவிட்டுப்போனானோ ... ... ... (௧௬௰)
பூவரசேயென்னைப் புணர்ந்தரசேயென்றிசைக்கும்
பூவரசேயென்னாசைப் பொன்னரசைக்காணீரோ ... ... ... (௧௬௧)
இன்பந்தருமரசே யென்னைக்கலந்தரசே
கும்பன்குருவரசே யென்குமரேசனைக்காணீரோ ... ... ... (௧௬௨)
தாழையேயென்னைமுனர்ந் தாழையேயிவ்வழிசெல்
வேளையேபோகவுமிவ் வேளையேகாணீரோ ... ... ... ... (௧௬௩)

வாசமகிளேயென் மனதுமிகமகிளேன்
நேசனேகிலேன்கும நேசனையுங்காணீரோ ... ... ... [௧௬௪]
பூமேவும்புன்னையே புலன்மறந்தேன்நான்முலையே
தான்மேவியென்னைத் தனித்துவிட்டுப்போனானே ... ... [௧௬௫]
வில்லையேயாசைவிட வில்லையேயேதுசொல்ல
விலலையேயோசமன மில்லையேயேதுசெய்வேன் ... ... [௧௬௬]
கதலியேநிசஞ்சேவல்க் காதலாயென்னைவிட்டுக்
கதலியானென்றிருந்தேன் கதலியூர்ச்சேகிலனே ... ... [௧௬௭]
காங்கையாரவ்வனத்தில் வேங்கையாய்நின்றவனும்
வேங்கையாய்நின்றானே வேங்கையர்சொல்வீரோ ... ... [௧௬௮]
பூவெடுக்கவந்தவளைப் பெண்டிருக்கச்செய்துமிர்தக்
காவில்த்தனித்துக் கடத்திவிட்டுட்டோனகதை ... ... ... [௧௬௯]
அன்றுநளராசன் தமையந்திதனைக்கானகத்தில்
ஒன்றியாய்விட்டு ஒளித்தோடும்வாராசசே ... ... ... [௧௭௰]
மணம்புகழ்விக்கிற மாகித்தனைசொண்டு
செண்பகவல்லிதனைச் சேறளித்தவாருச்சே ... ... ... [௧௭௧]
மங்கைபதுமாபதியை வச்சிரமகுடனணைந்து
அங்கவனைகசாட்டி லலையவிட்டவாராச்சே ... ... ... [௧௭௨]
ஆசமதில்ச்சீதைதனை யாரணியமானகிலே
யேசவிட்டராகவன்போ லென்னைவிட்டுப்போனானே ... [௧௭௩]
ஆசைகொண்டம்மைபயவ ளங்குமிங்குமில்லாமல்
மோசமையலன முறைபெனச்குவர்ததிப்போ ... ... [௧௭௪]
ஆரிடத்தில்ச்சொல்லியிப்போ யாருவேன்தெய்வமதை
நேரவென்றாலு முருகனைவிடவுந் தெய்வமுண்டோ ... ... [௧௭௫]
மணம்டாவந்தீர வசைபலதுண்டின்னிலத்தில்
என் பெண்பாவம்வீணாகப் போகாதுபோகாது ... ... [௧௭௬]
சிரார்கலையனூற் சேர்ந்திடல்க்கோட்டை
ஈராருடனே பெளிலசிறந்தமாநகரம் ... ... ... ... [௧௭௭]
தேக்கிருட்புமூன்றுந் திருநகரொன்றுமிருக்க
பிசகாபெனக்குப் பெருவயலூரென்றானே ... ... ... [௧௭௮]
கலியில்மகாதெய்வ முருகையனென்றேசொல்வாரண
பெலிமூநகனென்றெங்கே பேருண்டோபாரினிலே ... ... [௧௭௯]
பேருநமிவ்வகைமுன் பின்னுமேவேயுனாத்தால்க்
காரேமாகவுநான். கண்டுகொள்ளப்போறேனே ... ... [௧௮௰]

பென்றுபலவாய்மை யேர்திழையாள்தான்புலம்பி
அன்றவ்வனமு மலர்தலேந்துசோபமுற்ருள் ... ... ... [௫௮௧]
பாக்கியரெல்லோருமங்கே பன்மலரெல்லாமெடுத்து
மாங்குயிலாள் ரற்ன மாலேதனைத்தேடிவர ... ... ... [௫௮௨]
காவெல்லாந்தேடிக் காணுமலங்கேயொரு
மாவின்நிழலானதிலே மாணுனைகண்டோடி ... ... ... [௫௮௩]
தூக்கியெடுத்தணைத்துத் தூசத்திஞல்விசியவள்
சோக்கமறியாமல் சொர்ந்துதங்கையேதுணைப்பாள் ... ... ... [௫௮௪]
காரிகையேயெங்களைநீர் காணுமலெங்களையே
சோசயில்வனத்தில்த் தெய்வகுணையேதுமுண்டோ ... ... [௫௮௫]
கந்தருவர்கண்டாரோ கண்ணேறுபட்டதுண்டோ
உந்திப்பசியுள்ளதோ உரக்கமிகவுண்டாச்சோ ... ... [௫௮௬]
யென்றுபலவாய்மை யேர்திழைமார்சொன்னளவில்
ஒன்றுமறையாதாலே யொன்றுடையைத்தான்கூட்டி ... ... [௫௮௭]
மைலாகுடனேயர்தக் கன்னிதனைச்சொல்ப்பேடி
மையார்விழியார் மனைதனில்ப்போய்ச்சேர்ந்தார்கள் ... ... [௫௮௮]
மஞ்சமதுதன்னில் மலரணையின்மீதினிலே
வஞ்சிதனைக்கிடத்தி வைத்தங்குபசரித்தாள் ... ... ... [௫௮௯]
காமத்தின்மாச்சல்க் கடுமையதுபோராமல்
பூமெத்தைமீதேகண் பொருந்தாதுழன்றதிஞல் ... ... ... [௫௯௰]
வீசுவார்பன்னீரை வெறிச்சந்தனங்கள்தனைப்
பூசுவார்பஞ்சணையிற் போடுவார்மெல்லியனா ... ... ... [௫௯௧]
கூடவந்தபெண்கா குமரோசனுங்களுக்குச்
சாடைசொன்னதாலே தனித்துவிட்டுப்போனீரோ ... ... [௫௯௨]
வாசரிக்கோகிலங்கள் மதன்சேனைத்தென்றலென்றீர்
வீசுங்கதிர்மதியை வெண்மதியமென்றீரோ ... ... ... [௫௯௩]
மாரன்முரசெக்கான் மானகடல்மாங்குயிலும்
மாரமிக்கமோசையெனக் கனலாயிறைச்குதடி ... ... ... [௫௯௪]
பாயலதுதன்னில்மதன் பாணங்களைவிரித்து
பாயமுடனென்னைப் படுக்கவைத்தீர்பாதகியா ... ... ... [௫௯௫]
சார்ந்துபுனுகுபன்னீர் தன்னில்க்குழைத்தெடுத்து
யேர்திழையேநீங்க ளென்மார்பில்ப்பூசினது ... ... [௫௯௬]
பலநாளும்பாடிப் படித்துப்பரிசுபெருப்
புலவோருடையமனம் போலேகொதிக்குதடி ... ... ... [௫௯௭]

யென்றுரைத்தபோதினிலே யின்றெடுத்தமாதாவும்
கன்றுதனைத்தேடிக் கதறிவரும்பசுபோல் ... ... ... [௩௯௮]
ஓடிவந்தாளீன்ற வொன்றொடியைக்கண்டவுடன்
வாரிமுகந்துடைத்து மடிமேலெடுத்தணைத்து ... ... ... [௩௯௯]
மின்னாள்முகச்சுறிபு முகக்களைகள்மாறினதும்
நன்னயஞ்சேர்கொங்கை நகக்குறியு மபற்குறியும் ... ... ... [௪௱]
கண்டாள்நாட்கொண்டாள் கண்டிமெந்தச்சன்னியனை
வண்டார்மலர்கொய்ய வனத்திலேபோனீரோ ... ... ... [௪௱௧]
ஒன்றியாய்நின்றீரோ ஓடிமலர்கொய்தீரோ
யின்றுங்களைப்பிரிந்து யெர்நேரம்போயினரோ ... ... ... [௪௱௨]
உளவனில்லாமலந்த வளரறியமாட்டாது
வழியோடேபூங்கா வனத்திலேசென்றளவில் ... ... ... [௪௱௩]
கண்டவருமாரிவளைக் கலந்தவரும்ஆரடியென்
ஒன்றொடியீங்க ளுள்ளபடிசொல்லுயென்றாள் ... ... [௪௱௪]
அன்னையவள்கேட்குமப்போ அன்னநடைப்பொன்னியரும்
மின்னாளுமப்போது வினர்வளைப்பார்த்தேதுசொல்வாள் ... [௪௱௫]
அவ்வனத்திலநாங்க ளனைவோரும்வெவ்வேறாய்
செவ்வந்திமலர்கொய்ததலலாற் சேகரமாய்நிற்கவில்லை ... [௪௱௬]
சாமமதுவொன்றுவரை தையல்நல்லாளுன்மகளும்
பூமலருக்காய்த்தனித்துப் போனாள்செந்தூரம் ... ... [௪௱௭]
வர்ணமலரெடுத்து வர்துபின்புஉன்மகளை
அங்நேரங்காணா தடிபார்த்துவந்தோமம்மாள் ... ... ... [௪௱௮]
கந்தனடிபோலேயொரு காலடியுமவ்வனத்தில்
வந்துபோய்த்தானிருக்க மச்சமதுகண்டோமம்மாள் ... ... [௪௱௯]
மார்க்கத்தில்வந்தவரோ வார்த்தையொன்றுசொன்னார்கள்
மார்க்கமுடன்சொல்லுகிறேன் மாதாவேநீகேளும் ... ... [௪௱௰]
அரிவையெனும்வள்ளி தெய்வானைமனோகரந்தான்
பெருவயலூர்மேவும் ரண பெலிமுருகனென்பவர்தான் ... ... [௪௱௰௧]
பூவனத்திலப்பால்ப் போதப்பெருவனத்தில்
மேவும்புலிகரடி வேட்டைக்குவந்தாராம் ... ... ... [௪௱௰௨]
உச்சிதமாய்மேள மொலிமிகுத்தல்கேட்டேதம்மாள்
கொர்ச்சிதமும்படைஞர் கெக்களிப்புங்கேட்டேதம்மாள் ... ... [௪௱௰௩]
உள்ளத்திலுற்றபடி யொன்றொடியீர்சொன்னீரே
கள்ளன்முருகன்விட்ட காமப்பேயாகுமடி ... ... ... [௪௱௰௪]

மின்னுளீர்தனித்து விட்டுகுறையொன்றமல்லால்
பின்னேயொருகுற்றமுமுன் பேரிலேயில்லையடி ... ... (சாயரு)
மேவுகின்றபேருலக மேல்லாம்நிறைந்தவர்க்குப்
பூவெடுக்கவந்த புலனரீயமாட்டாரே ... ... ... (சாயசு)
வள்ளிதெய்வானையெனு மாதிருவர்தானிருக்க
தெள்ளிதமாய்த்தேசத்தில் சிறையெடுக்கநீதியுண்டோ ... (சாயஎ)
பெம்மான்முருகனிந்தப் பேதைதனைக்கண்டாக்கால்
சும்மாவிடுவானே தோகைமயில்வாகனத்தோன் ... ... (சாயஅ)
கண்டாலிவளுமொரு கைபார்ப்பாளல்லாது
வன்றியிவள்சும்மா வருவாளோகானரிவேன் ... ... ... (சாயகூ)
ஞாலமதிலெவ்வளவும் காள்விளம்பமானாலும்
வேலவனராசை விட்டொழியமாட்டாது .. ... ... ... (சஉம)
பசைத்திகளோசப்புகொண்டு பாளிலேயெய்தாற்போல்நான்
இணக்கமாய்ச்சொன்னபுத்தி யெவ்வளவுங்கேட்டாளோ ... (சஉக)
அனாக்சாசதற்கா யழிந்துவிட்டகற்பததான்
குறைச்சாமலாயிரம்பொன் கொடுத்தாலும்வாராதே ... ... (சஉஉ)
பவ்விலேபாரடுக்கப் பவ்விலொருபன்றென்றை
நவ்விரண்டுவாலேதா ஞனிவள்க்குச்சொன்னேனே ... ... (சஉங)
நாமறியநீனமுற்று லச்சைவருமென்றிருந்தால்
ஊமைகண்டகனவுக் கொப்பாயிருக்கலம் ... ... ... சஉச)
நீரேத்தங்கொண்டால் நிலைகொள்ளமாட்டாது
ஆனையுங்சேளாதெனவே யன்றொருநாட்சொன்னேனே ... (சஉரு)
ஏகாந்தமாகவும்நீ யென்னையல்லாதெவ்விடமும்
போகாதேயென்றிவட்குப் புத்திமதிசொன்னேன்நான் ... (சஉசு)
சாடைசன்னைகண்டாலுஞ் சம்மதமாகாவிடினும்
கூடவந்தபாங்கியைக் கூப்பிட்டாலாகாதோ ... ... ... (சஉஎ)
மோகினியாள்மந்திரமும் முன்பேபண்ணிவித்தமதன்
ஆகமங்களெல்லா மவனறியமாட்டானோ ... ... ... (சஉஅ)
பூவெடுக்கவும்மிவளைப் போவென்றசொன்னேனோ
மேவிமுருகனையும் விட்டுவரச்சொன்னேனோ ... ... (சஉகூ)
அண்டர்புகழுவரும் ஆறுமுகவேலனுர்க்குப்
பெண்டுகளேமுக்கியமாம் பின்னையொன்றும்வேண்டாமே ... (சஙம)
இன்னைசிக்காரன் கிழவன்சொற்கேள்ப்பானோ
அர்காளிலென்சொற் கடங்கியிருந்தாளோ ... ... ... (சஙக)

ஒப்பாதபேணாவனு வுத்தேயடங்கிவிட்டாற்
பிற்பாடவர்மீதில்ப் பேராசைகொள்வதுண்டோ … … … (௪௩௨)
தேவர்கடமாடுஞ் செழுங்காவில்ப்பெண்களுந்தான்
பூவெடுக்கவொண்ணாது போகாதேயென்றேனே … … (௪௩௩)
தாய்வார்த்தைகேளாமல்த் தள்ளிநடந்தபிள்ளை
நாய்வாயிலச்சேலையென நாட்டுவமைபொய்யாமோ … … (௪௩௪)
ஆசைகொண்டாலென்ன அயல்வீடறியாமல்
நேசம்வைத்துத்திரியும் நேரிளமாரெங்குமுண்டு … … … (௪௩௫)
பங்கமுமேச்சும் பழிப்பினையுமுண்டாகத்
தங்கச்சியூர்க்குள்த்தேமுக்கடித்துப்போட்டாளோ … … (௪௩௬)
ஆனைதனைக்குந்தி யச்சொல்லால்மறைத்ததுபோல்த்
தானிருத்திசகொண்டால்ச் சமர்த்தியவள்தானே … … … (௪௩௭)
இடும்பானதர்லேவிச மேறினல்த்தானுமென்ன
உடம்பரியாப்பேயாட்டு வுண்டோவுலகினிலே … … … (௪௩௮)
அன்னைசுற்றத்தாருக் சனுவும்பயமுமுண்டோ
இந்நேரமுற்றமொழி யெவ்வளவுஞ்சொன்னளோ … … (௪௩௯)
காலத்தின்செல்வமுங் காவலர்சள்கட்டளையும்
நீலியறிந்து நினைத்தபடிசெய்தாளோ … … … … (௪௪௰)
மாயமுருகனுக்கென் மகள்மீதிலாசையுற்றார்
தாய்பிள்ளையுண்டென்று சற்றுமெண்ணிப்பார்த்தானோ … (௪௪௧)
வஞ்சசடாசூரன் வந்தெடுப்பானென்றறிந்தால்
பஞ்சவரும்வைப்பாரோ பாஞ்சாலியைத்தனித்து … … (௪௪௨)
கோதைவள்ளியிந்தக் குகனெடுப்பானென்றறிந்தால்
சாதகமாய்ப்புனத்தில்த் தானிருக்கச்செய்வாரோ … … (௪௪௩)
ஆண்டியாய்வந்தோ னருச்சுனனுமென்றறிந்தால்
வேண்டிச்சுமுத்திரையை விடைசெய்யவைப்பாரோ … … (௪௪௪)
மேநாளிலிட்ட விதியைவெல்லுவாருமுண்டோ
மானுளிவள்க்குவிதி வாணாயன்றிவேறுளதோ … … … (௪௪௫)
வையகத்தாரடாத்தை மன்னரிடஞ்சொல்லிடலாம்
தெய்வமடாத்துச்செய்தால்ச் செப்புவதுமாரிடத்தில் … … (௪௪௬)
தெய்வமதசிரக் கைதவமுமாகுமென்று
துய்யமொழியவ்வையுமுன் சொன்னளேபாகையினல் … … (௪௪௭)
இந்தவுலகத் தியர்க்கையதுசொன்னேனுன்
தந்தன்பகைநமக்குக் கடுகேளவுமாகாது … … … … (௪௪௮)

என்றேந்திழைதானு மிவ்வாறுரைத்ததங்கே
நின்றதொருபாங்கியரை நீர்போமெனவுரைத்தாள் ... ... (௪௪௯)
வேலைநேர்த்தவிழி மின்னேநானின்றதொத்த
மாலையைக்கைக்கொண்டு மாதாவுமேதுசொல்வாள் ... ... (௪௫௰)
பூவெடுக்கச்சென்றாய் புதையலெடுத்துவந்தாய்
ஆவலுற்றபேருக் கனுவும்வரமாட்டாதே .. ... ... ... (௪௫௧)
அண்டமெல்லாம்போற்று மாறுமுகத்தெய்வமுனைப்
பெண்டுவைக்கப்பெற்ற பேறாவினல்வேறுமுண்டோ ... ... (௪௫௨)
பாரிலேவேணதவம் பண்ணினாலுநமக்கு
ஆறுமுகத்தெய்வ மருள்புரிவதுமெளிதோ ... ... ... (௪௫௩)
பேரிளமையின்பம் பிணிமூப்புச்சாக்காலம்
ஆறுங்கருவி லமைத்தபடியாகும் ... ... ... ... (௪௫௪)
பாக்கியத்திலிந்திரன்போல்ப் பதவியிலேசாயுச்சியம்
பெற்றமுடனிப்போது யென்மகளும்பெற்றாயே ... ... ... (௪௫௫)
வையகத்தில்முன்னான் மாதவமேசெய்ததனால்த்
தெய்வமெனக்குத் திருமருகனாச்சுதடி ... ... ... ... (௪௫௬)
சேத்திலேதான்பிறந்த செந்தாமரைபோலும்
மாத்தில்லாத்தங்க மண்ணிற்பிறந்ததுபோல் ... ... ... (௪௫௭)
முன்னீரில்ச்சிப்பியிலே முத்துதித்தவாரதுபோல்
அன்னமேயென்வயற்றி லவதரித்தாயென்மகளே ... ... (௪௫௮)
மால்கொண்டார்தேடி வலியவிங்கேவாராரோ
ஆல்பழுத்தால்பட்சிகளுக் காளனுப்புவாருமுண்டோ ... ... (௪௫௯)
கரும்பானதுதானுங் கட்டோடேதானிருந்தால்
எறும்பானதுதானு மெப்போதுந்தேடிவரும் ... ... ... (௪௬௰)
கருப்பைக்குள்க்குஞ்சுக்குங் கல்லுக்குள்த்தேரைக்கும்
விரும்பியமுதளிக்கு மெய்யன்முருகையனடி ... ... ... (௪௬௧)
உள்ளும்பிரமு முள்ளானதெய்வமல்லோ
என்னுக்குளெண்ணெய்பைப்போ லிருக்கும்வடிவேல்முருகன் ... (௪௬௨)
அடுத்தமுயன்றாலு மாகுநாளன்றி
தொடுத்தகருமங்கள் தோயாதென்றவ்வைசொன்னாள் ... ... (௪௬௩)
ஆங்காலமெய்வருந்த வேண்டாமருங்கொப்பில்
தேங்காய்க்கிளநீரதுபோலச் சேர்ப்பிவித்தபேருமுண்டோ ... ... (௪௬௪)
பூவினால்நாறுமணம் பூண்டதுபோலேமுருகன்
மேவினதாலேயுனக்கு மேலாம்பதமாச்சே ... ... ... (௪௬௫)

வாராதுவாராது வாரதவுப்போசாது
பேராசைப்பட்டுமென்ன பெண்ணாசேநற்காலம் ... ... (சசுசு)

வந்ததினாலுன்னிடத்தில் வலியமுருகேசன்
வந்தணைந்தானின்னம் வருவான்வருவானடி ... ... ... (சசுஎ)

என்றுபலவாய்மை யீன்றவளுஞ்சொன்னளவில்
வன்றெவரும்வருமென் றசரீசர்சொன்னதுவே ... ... ... (சசுஅ)

பல்லிநிமித்தம் பலபலவென்றேகினதும்
வல்லமையாய்க்காகம் வலத்திலேசொன்னளவில் ... ... ... (சசுகூ)

மையல்கொண்டமாதவளு மாதாவுந்தான்மகிழ்ந்து
வையம்புகழ்முருகன் வரவுபார்த்தேயிருந்தார் ... ... ... (சஎ0)

தென்னவர்க்குச்சம்மந்தர் செங்கையால்நீரிடவே
அன்னாளில்பாண்டியன்ற னங்கம்போலேகுளிர்ந்தார் ... ... (சஎக)

அன்றுபூங்காவனத்தி லாயிழையைத்தானிருத்திச்
சென்றமுருகேசன் சித்தமதிலேமகிழ்ந்தார் ... ... ... (சஎஉ)

பாங்கிவளையழைத்துப் பணகரொத்னபூஷணமும்
மாங்குயிலாள்க்கின்பமுற வஸ்திரமுந்தானருளி ... ... ... (சஎங)

இப்போதழைத்துவரு மென்னமுருகேசன்
செப்பிடவுமங்நோஞ் சேயிழைமாரெல்லோரும் ... ... ... (சஎச)

பாதுரோத்தினமாலை வாழும்பதிசேர்ந்து
நாதன்முருகேசன் நவின்றதெல்லாமுறைத்து ... ... ... (சஎரு)

ஆரமுர்தமுண்டாப்போ லன்னையருமின்னாளும்
பூசித்தார்தன்மகளைப் போதவலங்கரித்தார் ... ... ... (சஎசு)

வாழ்த்திவிடைகொடுத்து மகளைச்சிவிகையின்மேல்
ஏற்றியேபோய்வாரும் யென்மகளேயென்றுரைத்தாள் ... ... (சஎஎ)

அரிவையர்கள்தான்சூழ அமுர்தயோகதினத்தில்
பெருவிதஞ்சேர்கின்ற பெருவயலூர்சன்னதியில் ... ... ... (சஎஅ)

வந்திடவுங்கண்டு மயில்வாகனக்கடவுள்
சிந்தைமகிழ்ந்தார் திருமால்மலர்மகன்போல் ... ... ... (சஎகூ)

வேளும்ரதியுமென மென்னாளினுமுருக
வேலுரத்னமாலையுடன் மேவிமகிழ்ந்திருந்தார் ... ... ... (சஅ0)

நாவுலகமபோற்றும் ரணபெலியின்மாமுருகன்
மேவுந்திருச்சன்னதியு மென்னாளினும்வாழி ... ... ... (சஅக)

சேதுசமஸ்தானஞ் செங்கோன்மைபெற்றதிரு
மாதுபருவத வர்த்தனித்தாய்தான்வாழி ... ... ... ... (சஅஉ)

மேதைபெற்றமுத்து விசையன்ரெகுநாத
சேதுபதிராசேந்திரன் செல்லத்துரைவாழி ... ... ... [௪௮௩]
தாரணியிற்சேது சமஸ்தானமானேசர்
மாரன்கோட்டைச்சாமி வாழ்வுபெறவேவாழி ... ... ... [௪௮௪]
வர்த்தனைசேர்யோகன் மாப்பிள்ளைச்சாமியெனும்
சித்திரநாராயணவேள் சீர்பெருகவேவாழி ... ... ... [௪௮௫]
அம்புவியில்வானருக்கு மரசருக்குமைந்தருவாம்
தென்புதுவையூரான் சிவஞானமால்வாழி ... ... ... [௪௮௬]
வையகத்தில்நாகலிங்கம் வாசனருள்சேயன்
அய்யன்பெருமாள்குருவு மந்தணர்களும்வாழி ... ... ... [௪௮௭]
நித்தியமுங்கோவில் னிருபாகியாகவரும்
முத்துராமலிங்க முதல்வன்கிளைவாழி ... ... ... ... [௪௮௮]
கொற்றவர்கள்மெச்சவரும் கோவிற்கணக்கர்களும்
முத்திரைக்கணக்கு முதலானபேர்வாழி ... ... ... ... [௪௮௯]
தானக்கணக்கர்களுஞ் சருவத்தார்மிகவாழி
மாநிலத்தோர்வாழி மறையோர்களும்வாழி ... ... ... [௪௯௰]
பூமிபாலன்வைகைப் பொருந்தவராந்தென்னை
சாமிநாதன்சொல்லுந் தமிழிதுவும்வாழியதே ... ... ... [௪௯௧]

இரணபெலிமுருகன்பேரிற்காதல்

முற்றிற்று.